**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாஞ்சாலி சபதம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
2. கீர்த்தனை, கும்மி, சிந்து என்பன எவ்வகைப் பாடல்?
3. நாடகம் எத்தனைக் கூறுகளையுடையது? அவை யாவை?
4. தமிழ்ச் சிறுகதையின் தந்தை எனப்படுபவர் யார்?
5. குறள் வெண்பா யாப்பால் அமைந்த நூல் எது?
6. தொடை எத்தனை வகைப்படும்?
7. 'சர்ப்பயாகம்' யாருடைய படைப்பு?
8. மணிமேகலையில் உள்ள காதைகள் எத்தனை?
9. 'குறிஞ்சித்தேன்' என்னும் நாவலின் ஆசிரியர் யார்?
10. சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுபவர் யார்?
11. சாகுந்தலம் என்னும் நாடகத்தின் ஆசிரியர் யார்?
12. நாடகக் காப்பியம் என்று அழைக்கப்படுவது எது?
13. திருஞான சம்பந்தர் எந்த வயதில் படைப்பாளியாக மாறினார்?
14. கதைப்பின்னல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. தமிழ் நாடகத் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. நாடகம் – பொருள் கூறுக.
2. புதினத்திற்கும் சிறுகதைக்கும் இராஜாஜி கூறும் விளக்கம் யாது?
3. ஆசிரிய விருத்தத்தின் இலக்கணம் கூறுக.
4. வரலாற்று நாவல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
5. பால்முறைப் பகுப்பு – விளக்குக.
6. வரதட்சணை வாங்குவது குறித்துக் காந்தியடிகளின் கருத்து என்ன?
7. படைப்பிலக்கியத்தின் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
8. நொண்டி நாடகம் – விளக்கம் தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உத்திமுறைக் கவிதைகள் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவின் இலக்கணம், வகைகள் குறித்து எழுதுக.

2. (அ) இருபதாம் நூற்றாண்டு நாவல்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் உத்திகள் குறித்து விளக்குக.

3. (அ) புதுமைப்பித்தனின் சிறுகதை – 'ஒரு நாள் கழிந்தது' திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறக் கூத்துகள் – குறித்து விளக்கி வரைக.

***